AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 19

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை வெளிவரும் ஜூன் 1முதல் 15வரை

ஆன்மீக விஞ்ஞான இதழ்



## விபத்திலிருந்து விலக...

- ★ ஆராதனை ஆலயங்கள்
- ★ நாயன்மார் வரலாறு
- ★ வியப்பூட்டும் மகான்கள் !
- ★ மூலிகை ரகசியம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



முன் ஜென்மம் பற்றி நிறைய கருத்து வேறுபாடுகள் உண்டு. ஆனால், முன் ஜென்மம் என்பதை அறிவது நம்முடைய அறிவைப் பற்றி தெரிந்து கொள்வதாகும். இந்த முற்பிறவி பற்றி மேலை நாடுகளில் பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி செய்கின்றன.

இப்போது நமக்கு இருக்கும் அறிவு எதை அடிப்படையாகக் கொண்டது என்பதை அறிய, முன் ஜென்மம் மட்டுமே சரியான வழியைக் காட்டும். மூளையில் பதிந்திருக்கும் முன்ஜென்ம பதிவுகளின் மிச்சம் இந்த ஜென்மத்தில் நம்மை வழிநடத்தும் என்பதே உண்மை!

~ Dr. Baskaran Pillai

சத்வித்யா வாசகர்களுக்கு வணக்கங்கள் பெருந்தொற்று வேகமாக பரவி வரும் இன்றைய காலகட்டத்தில் தன்னம்பிக்கை, தைரியம், நேர்மறை எண்ணங்களோடு அனைவரும் இருக்க வேண்டியது அவசியம்.

நாம் நலமுடன் இருக்கிறோம் என்னும் உணர்வே நம்மை கவசமாய் காக்கும்.

இறையருள் நமக்கு துணையாக உள்ளது என்னும் துணிவோடு சமூக இடைவெளி, முகக்கவசம், பொது இடங்களில் கூடுவதைத் தவிர்ப்பது போன்ற நடைமுறைகளை கடைப்பிடித்தால் நன்மையே உண்டாகும்.

ஊரடங்கு விதிகளை சரியாக பின் பற்றி, வீட்டிலேயே இருந்து ஆயுர்வேத, சித்த மருத்துவ குறிப்புகளை பயன்படுத்தினால் வருமுன் காக்கலாம் தொற்று வராமலே தடுக்கலாம்.






(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# செந்தூரில் உயர்ந்திருக்கும் சந்தன கொடி மரம்

எம்பெருமான் முருகவேள், சூரர்களை சம்ஹாரம் செய்த திருத்தலமான செந்திலம்பதி என போற்றப்படும் திருச்செந்தூரில் சேவற் கொடியோன் அருள் புரிந்து வரும் ஆலயத்தில் உயர்ந்தோங்கி நிற்கும் கொடிமரமானது ஒப்பில்லாத சிறப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது!

இந்த கொடிமரத்தின் மகிமை என்பது, கோடானுகோடி பக்தர்களின் வாழ்க்கையை சீர்படுத்தி உள்ளது! இதன் சிறப்பை அறிய வேண்டுமென்றால் முதலில் இந்த கொடிமரம் இவ்வாலயத்திற்கு வந்த வரலாறு என்ன என்பதனை விரிவாக அறிவோம்.




ஒரு காலத்தில் செந்தூரின் ஆலயத்தில் கொடிமரம் என்பதே இல்லை. கொடி மரம் இல்லாமையால் இங்கு மாசி திருவிழா நடத்தப்படாமலேயே இருந்தது!

எப்படியாவது, ஆலயத்தில் மாசித்திருவிழாவினை நடத்திட வேண்டும் என ஆர்வம் கொண்ட ஊர்ப் பெரியவர்கள் ஒன்று கூடி, முதலில் ஆலயத்திற்கு தரமான கொடிமரம் ஒன்றை பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று தீர்மானித்தனர்! தச்சுக் கலையில் சிறந்து விளங்கிய பக்திமான் ஆறுமுக ஆசாரி என்பவரின் தலைமையில் 21 பேர் கொண்ட குழுவினை அமைத்து, ஆலயத்திற்கான கொடி மரத்தை கொண்டு வரும் பொறுப்பினை அவர்களிடம் ஒப்படைத்தனர்.

ஆறுமுக ஆசாரி தலைமையில் அனைவரும் கொடிமரம் தேடி, மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள பொதிகை மலைக்கு போகலாம் என முடிவெடுத்தனர்.

புறப்படும் போது திருச்செந்தூரின் மந்தையில் அமைந்துள்ள அம்மன் கோவிலுக்கு அனைவரும் சென்றனர். எல்லோரையும் வெளியிலேயே நிற்கச் சொன்ன ஆறுமுகம் ஆசாரி, தான் மட்டும் உள்ளே சென்று அம்மனை, கண்களை மூடி வேண்டினார்!

கண் திறந்து பார்த்த ஆசாரிக்கு அதிர்ச்சி! ஆம்! அம்மனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது பதறிய ஆறுமுக ஆசாரி! "தாயே என்ன இது சோதனை?" என வாய் விட்டு கதற, அம்மனின் குரல் அசரீரியாய் ஒலித்தது "மகனே! கொடிமரம் கொண்டுவர உன்னோடு வருகின்ற ஒருவரும் உயிரோடு திரும்பப் போவதில்லை! அதை நினைத்தே வருந்துகிறேன்! எல்லாம் விதிப்படி நடக்கட்டும்! சென்று வா! இதை நீ யாரிடமும் சொல்ல கூடாது! இது தெய்வத்தின் கட்டளை," என ஒலித்த அசரீரியால் நிலை குலைந்து திகைத்தார்!

வெளியில் சொன்னால் தெய்வக் குற்றத்திற்கு ஆளாக நேரிடும் போகாமலும் இருக்க முடியாது!.....வேறு வழியில்லை! அமரர் குறை தீர்த்த ஆண்டவன் முருகப் பெருமானின் மீது பாரத்தைப் போட்டு பயணத்தைக் தொடங்கினார்கள்.

பயணத்தின் இடையே களக்காடுக்கு அருகேயுள்ள ஏர்வாடிக்கு சென்ற ஆறுமுக ஆசாரி, அங்கு உள்ள மந்திரவாதியான மரைக்காயரை சந்தித்து, கொடிமரத்திற்காக செல்லும் தங்கள் நோக்கத்தைக் கூறி, அவரை தன்னுடன் வருமாறு அழைத்தார்.

இதைக் கேட்ட மரைக்காயரின் மனைவி, கதறினாள், "வேணாங்க! நேற்று இரவு ஒரு மோசமான கனவு கண்டேன் நீங்கள் போக வேண்டாம்!" என மன்றாடினாள், அவள் சொல்லை மீறி, அந்த குழுவினரோடு புறப்பட்டார் மரைக்காயர்! கொடிமரம் கொண்டு வர 21 மாட்டு வண்டிகளோடு அவர்களது பயணம் புறப்பட்டது!

அருகில் இருந்த மலைப் பகுதிகளில் சென்று கொடிமரத்திற்கான மரத்தை ஆய்வு செய்தனர். எதுவும் தோது படவில்லை! மேலும் சில இடங்களில் தேடிய பின்னர், பொதிகை மலைக்கு செல்லலாம் என மரைக்காயர் சொல்ல, அனைவரும் பொதிகை மலை சென்று, மலை உச்சியை நோக்கி பயணப்பட ஆரம்பித்தனர்!



பொதிகை மலையின் உச்சியில் தேடினர். நெடிதுயர்ந்த ஒரு மரம் கண்ணில் பட இது தான் கொடி மரத்திற்கு தகுந்த மரம் என ஆறுமுக ஆசாரிக்கு தோன்ற, அதையே கொண்டு செல்ல முடிவெடுத்தனர். இந்நிலையில் மரைக்காயரை அழைத்து அந்த மரத்தைப் பற்றி கேட்டார், ஆசாரி! இது சந்தன மரம்! மிகவும் பெரியதாகவும் உள்ளது! இதில் வேறு ஏதாவது குற்றம் உள்ளதா என்று மைபோட்டு பார்த்தார்! அப்படி பார்த்ததில் சுடலை மாடன், சங்கட காரன் போன்ற 21 தேவதைகள் அந்த மரத்தில் வசித்து வருவதை அறிந்தார்! இந்த 21 தேவதைகளையும் மந்திரத்தால் மை போட்டு விரட்டி விடலாம் என்று சொன்ன மரைக்காயர், தேவதைகளை விரட்ட, மந்திர உச்சாடனம் செய்தபடி பூஜைகள் செய்யத் தொடங்கினார்.

கோடரிகளைக் கொண்டு மரத்தினை வெட்டும் படி சொன்னார். மற்றவர்கள் வெட்டத் தொடங்கினர். மரத்தை நோக்கிப் பாய்ந்த கோடாரிகள் எதிர்ப்புறம் திரும்பி, வெட்டியவர்களின் கழுத்தை பதம் பார்க்க, 20 பேரும் வெட்டுப்பட்டு உயிர் துறந்தனர்.

இதையெல்லாம் பார்த்து பதறிய ஆசாரி, மரைக்காயரை நோக்கி ஓட, மேலும் அதிர்ந்தார். அங்கே..... மரைக்காயர் ரத்தம் கக்கி மாண்டு கிடந்தார். ஆறுமுக ஆசாரிக்கு ஒன்றும் புரியவில்லை. அம்மன் சொன்னது அப்படியே நடந்து விட்டதை எண்ணி, கலக்கமுற்றார். இனி, இந்த மரத்தை எப்படி வெட்டி



கொண்டு செல்ல முடியும்!? குழம்பினார்.
இந்த நிலையில் அந்த மரத்தில் இருந்த 21 தேவதைகளும் ஆறுமுக ஆசாரியை விரட்டின. உயிர்ப் பயத்தில் ஓடிய ஆசாரி, தாமிரபரணியாற்றங்கரையில் இருந்த சொரிமுத்து அய்யனார் கோயிலுக்கு சென்று அய்யனாரின் பாதங்களை பற்றியப்படி தன்னை காப்பாற்றும் படி மன்றாடினார்
உடனே, சொரிமுத்து அய்யனார், 21 தேவதைகளையும் சமாதானம் செய்து, "எனது சகோதரன் முருகனின் ஆலயத்திற்கு தான் இந்த கொடி மரம் செல்கிறது; ஒத்துழைப்பு கொடுங்கள்," எனக் கூற, "அப்படியானால் நாங்கள் 21 பேரும் இந்த மரத்தில் தான் இருப்போம்!
முறைப்படி எங்களை வணங்கிய பின் தான் மற்ற பூஜைகள் நடைபெற வேண்டும்; என்று தங்கள் தரப்பு வாதத்தை சொல்ல, அதனை ஏற்ற சொரிமுத்து அய்யனார், மரத்தை வெட்டி, செந்தூருக்கு கொண்டு செல்லும் பொறுப்பை அவர்களிடமே ஒப்படைத்தார்.
அதன்படியே, 21 தேவதைகளும் மரத்தினை வெட்டி, ஆசாரி கொண்டு வந்திருந்த 21 மாட்டு வண்டிகளை ஒன்றாக இணைத்து, மரத்தை அதில் ஏற்றி திருச்செந்தூருக்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

### தினமும் நடைபெறும் சிறப்பு

இப்படி கொண்டு வந்து ஸ்தாபிதம் செய்யப்பட்ட கொடி மரத்திற்கு தினமும் அதிகாலை 5 மணிக்கு பூஜைகள் நடக்கிறது. அதன் பிறகு தான் கருவறை நடை திறக்கப்படுகிறது.

கொடிமர பூஜையில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு அந்த மரத்தில் வாழும் சுடலைமாடன் போன்ற 21 தேவதைகளும் நல்லாசிகளை வாரி வழங்குகின்றனர்.

எனவே, திருச்செந்தூர் செல்லும் பக்தர்கள் அதிகாலையில் நடைபெறும் கொடிமர பூஜையில் கலந்து கொண்டு அருள் பெறுவதோடு, சுப்ரமணிய ஸ்வாமியின் அருட்கடாட்சம் பெற்று நலம் பெறுங்கள்.

~ ரா. பன்னீர்செல்வம்

# ஆராதனை ஆலயங்கள்

ஆன்மீக உலகில் அறியப்படும் ப்ரம்மம் என்பது எவரின் கண்ணுக்கும் புலப்படாத அரிய ஒன்று. ஆனால் சாஸ்திரத்தில் அருளப்பட்டபடி ஒவ்வொருவருடைய இதயத்துக்குள்ளும் பிரம்ம சொரூபம் உள்ளது.

எனவே ஒரு ஆத்மாவின் பரிபூரண வளர்ச்சி என்பது அதனுள்ளே இருக்கும் பிரம்ம சொரூபத்திற்கு தக்க வாறே அமையும். பின்பு அந்த ஜீவன் பிரம்மத்துடன் கலந்து விடும்.

இந்த உடலுக்கு எந்த ஒரு காலமானது விதிக்கப்பட்டு உள்ளதோ, அந்தக் காலமானது முடிவடைந்த உடனேயே உள்ளே இருக்கும் பிரம்ம சொரூபம் வெளியே சென்று விடும் இயல்பு படைத்தது.



வாயு மண்டலத்தையும் தாண்டி பிரம்ம சொரூபம் இருப்பதால், வெளியே புறப்பட்டுப் போன பிரம்ம சொரூபம், கண்களுக்கு புலப்படாதவாறு வெளியே எங்கும் பரவிக் கிடக்கும் பிரம்ம சொரூபத்துடன் ஐக்கியமாகி விடுகிறது.

கொஞ்சகாலம், அதன் ஆயுள் உடலில் நிர்ணயிக்கப்பட்ட வரை அந்த பிரம்ம சொரூபம் இருந்து வந்த காரணத்தினாலேயே அந்த உடலானது ஒரு தனித் தன்மை பெற்றதாக ஆகி விடுகிறது.

இக்காரணங்களால் அந்த உடலுக்கு பூமியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில், அத்தகைய பிரம்ம சொரூபமாக விளங்கிய மகானின் சீடர்களால் ஒரு சின்னமானது ஏற்படுத்தப்படுகிறது.
சின்னம் என்பது பூஜை செய்வதற்கான ஒரு உருவாகும்.

அது லிங்க வடிவில் கூட அமைக்கப்படலாம். இந்த லிங்கம் ஒரு ஸமாதியின் அந்தஸ்தாகத் தான் ஏற்றுக்கொள்ளப்படும்.
ஆனால் ஆலயமாக கருதப்படாது. இருந்தாலும் அதனை வழிபட கோவிலின் ஆராதனை விதிகளை விட, வேறு விதிமுறைகளைத் தான் அனுஷ்டிக்க வேண்டும்.

இருப்பினும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை இதயத்தில் வைத்து வழி படுவதைப் போலவே, ஸமாதியில் இருக்கும் மகானை அவரது சீடர்கள் மனதில் நிறுத்தி, வழிபாடு விதிகள் படி, தினசரி, வருடாந்திர ஸமாதி தினம், சில விசேட குறிப்பிட்ட தினங்கள் என முறைப்படுத்தி பூஜிக்கும்

வழக்கம் நடைமுறையில் அனுஷ்டிக்கப் படுகிறது.
ஒரு மகானை பகவான் தேர்ந்தெடுத்து, அவருக்கு இறை வினோதங்களை புரிய வைத்து, தன்னுடன் ஐக்கியப்படுத்திய பிறகு அந்த உடல் எங்கு சேர்க்கப்படுகிறதோ அந்த இடமே மகானின் ஸமாதியாகிறது.

சாஸ்திரங்களில் கூறப்படும் ஸமாதி முறைகளில் குறிப்பிடத்தக்க சில ஸமாதிகள் இப்படி அமையும், பூமியிலே ஸமாதி, நீரிலே ஸமாதி, அக்னியிலே ஸமாதி, வாயு மற்றும் ஆகாயத்திலும் ஸமாதி என. சில மகான்கள் ஒரே ஸமாதியாக நிற்பது தவிர, அவர்கள் அந்த ஸமாதிக்கு மேற்பட்டும் இரண்டு, மூன்று என 12 ஸமாதிகளாக பூர்த்தி செய்யும் நிகழ்வுகளும், நடந்துள்ளன.
இரண்டாவது அம்சமாக ஜீவஸமாதி அடைவதும் உண்டு. அந்த ஜீவ ஸமாதிக்கு உதாரணமாக திகழ்கிறார் மகான் ஸ்ரீ இராகவேருதிர ஸ்வாமிகள்.

இவ்வுடலில் சிலகாலம் பிரம்மம் இருந்து வந்த காரணத்தினால், அந்த உடல் ஸமாதி வைக்கப்பட்ட இடத்திலிருந்து சிறிது தூரம் வரை அந்த பிரம்மத்தின் சக்தியானது பரவக் கூடிய நிலை உள்ளதால். அந்த இடத்திலிருந்து மண் எடுத்து வேறு இடத்தில் வைத்தாலும் அந்த சக்தி அங்கும் இருக்கும் என்பது ஆன்மீகக் கணிப்புகளில் ஒன்று.

இறைவனின் தொண்டர்களை வணங்கினாலும், அவர்களை பூஜித்தாலும், அது பகவானுக்கு ஆனந்தத்தை அளித்து அப்படி பூஜிப்போருக்கு பல நற்பலன்களை நிச்சயம் அருள்வார் என்பது பல மகான்களின் சரிதங்கள் நமக்கு உணர்த்தியுள்ளன.

"தொண்டர் தம் பெருமை
சொல்லவும் கூடுமோ"

எனவே, மகானின் ஸமாதி என்பது ஒரு ஆலயம் ஆகாவிடினும், ஒரு ஆலய வழிபாட்டில் கிடைக்கும் அத்தனை பேறுகளையும், ஒரு பரிபூரணரின் ஸமாதி நமக்குத் தந்து விடுகிறதே!

~ கீதாமணி




KABA SURA KUDINEER
15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties
Call: 88702 88701

# விபத்திலிருந்து விலக...

அன்னையின் அழகைப் போற்ற வந்த பாடல்களே மந்திரத் தன்மை வாய்ந்த சக்தி மிக்க ஸ்தோத்திரங்களாய் வடிவெடுத்துள்ள அதிசயம் சௌந்தர்ய லஹரியில் உள்ளது என்பதனை நாம் அறிவோம்.

அந்த வகையில், துன்பம் நீக்கும் சௌந்தர்ய லஹரியின் 28 வது பாடல் "விபத்திலிருந்து விலக".....வழி செய்யும் ஆற்றலைப் பெற்றுள்ளது இந்த மந்திரப் பாடலை மனமுருகி ஜபம் செய்யும்போது விபத்துகள் நம்மை விட்டு விலகும் என்பது திண்ணம்.

**மந்திரப் பாடல்:**

"ஸுதா மப்யாஸ்வாத்ய ப்ரதிபய- ஜராம்ருத்யு -ஹரிணீடம் விபத்யந்தே விச்சே விதி - சதமகாத்யா திவிஷத

கராலம் யத் ஷ்வேலம் கபலிதவத: காலகலனா

ந சம்போஸ் தன் மூலம் தவ ஜனனி தாடங்க - மஹிமா".

**பாடலின் பொருள்:**

கொடுமையான மூப்பு மற்றும் மரணங்களைக் கூட வெல்லும் ஆற்றலைப் பெற்ற அமுதத்தை உண்டும் கூட பிரம்மா, இந்திரன் முதலான தேவர்கள், பிரளய காலத்தில் அழிந்து விடும் நிலையில்.....அம்பிகையே உன் நாதனான சிவப்பரம் பொருள் மட்டும் கொடிய விஷம் அருந்தியும் அழிவின்றி இருப்பதற்குக் காரணம் என்ன? உன் காதுகளில் ஒட்டி உறவாடும் "தோடு" என்கிற தாடங்கத்தின் மகிமை தானே?.... அதனால் தான் கணவன் நலமுடன் வாழ பெண்கள் தங்கள் காதுகளில் தோடு அணிகிறார்களோ?



**பிரயோகிக்கும் முறை:**

இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை தங்கம் அல்லது பஞ்சலோகத் தகட்டில் வரைந்து பூஜைக்கு பயன்படுத்த வேண்டும்.

தினமும் 1008 முறை 45 நாட்களுக்கு தென் கிழக்கு திசை பார்த்து அமர்ந்து ஜபிக்க வேண்டும்.

சிவப்பு நிற மலர்களால் துர்கா அஷ்டோத்திர அர்ச்சனை செய்தல் நலம்!

எள் உருண்டை, சாதம், பால் பாயசம் கர்ப்பூர வீடிகா என்னும் தாம்பூலம் ஆகியவற்றை நைவேத்யமாக படைக்க வேண்டும்.

மேற்கண்ட முறையில் மந்திரத்தை பிரயோகம் செய்து பூஜைகள் செய்வதால் திடீர் மரணங்கள், எதிர்பாராத விபத்துகள் ஏற்படாது அப்படிப்பட்ட சூழ்நிலை வந்தால் அதிலிருந்து இந்த மந்திர மகிமை நம்மை விலக்கி விடும்.

~ ரா. பன்னீர்செல்வம்

# எதிரி மற்றும் எதிர்மறை சக்திகளிடமிருந்து நம்மை காத்து வளமான வாழ்வை அருளும் ஸ்ரீ துர்க்கை அம்மன் எந்திரம்

ஸ்ரீ துர்க்கை அம்மன் ஒரு கடுமையான தெய்வம் ஆவார், அவர் அனைத்து எதிர்மறை சக்திகளிலிருந்தும் மக்களைத் காக்கக்கூடிய தெய்வம் ஆவார். எனவே ஸ்ரீ துர்க்கை அம்மன் எந்திர வழிபாடு முறையாக செய்பவர்களின் வாழ்க்கையில் அனைத்து வகையான எதிர்மறை தாக்கங்களிலிருந்தும் அவர்களை பாதுகாத்து கொள்ள முடியும். இந்த துர்க்கை அம்மன் எந்திர வழிபாட்டை தொடர்ந்து செய்து வந்தால் துர்க்கா தேவியின் அருளைப் பெறலாம், நீண்ட நெடுங்காலம் யாரெல்லாம் துன்பம், துக்கம் மற்றும் துயரங்களில் உழன்று கொண்டு இருக்கிறார்களோ அவர்கள் இந்த துர்க்கை அம்மன் எந்திரம் கொண்டு பூஜை செய்வதன் மூலம் தம்மை பாதுகாத்து கொள்ளலாம், மேலும் அவர்களுக்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் சந்தோஷமான வாழ்க்கையை அளிக்கும் தெய்வமாக துர்க்கை அம்மன் திகழ்கிறார். சர்ப்ப தோஷத்தால் திருமணம் தடை தாமதம் ஆனவர்கள் இந்த துர்கையம்மன் எந்திரத்தை வைத்து பூஜை செய்வதால் எளிதில் திருமணம் கைகூடும். திருமண வாழ்வில் பல துன்பங்களை அனுபவிக்கும் பெண்களுக்கு திருமண வாழ்வில் நல்லிணக்கத்தையும் ஸ்ரீ துர்க்கை அம்மன் எந்திரம் அருளக்கூடியது.

இந்த போட்டி உலகில் உள்ளவர்கள் தெரிந்தும் தெரியாமலும் பல தவறான செயல்களையும் பாவங்களையும் செய்கிறார்கள். இவ்வளவு மகத்துவம் பெற்ற துர்க்கை அம்மன் எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, தினமும் செவ்வரளி பூவை கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் தீய எதிர்மறை சக்திகளிலிருந்தும் எதிரிகளிடமிருந்தும் நம்மை பாதுகாத்து, நமக்கு வெற்றியை கொடுத்து வளமான நல்வாழ்வை பெறலாம்.

**ஸ்ரீ துர்க்கை அம்மன் எந்திரத்திற்குறிய மந்திரம்:**

காத்யாயனாய வித்மஹி
கன்யாகுமாரி தீமஹி
தன்னோ துர்க்கி பிரச்சோதயாத்



~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# ஸ்ரீ நரசிம்மர் குடிகொண்ட சிங்கப் பெருமாள் ஆலயம் !

கவிச் சக்கரவர்த்தி கம்பர் தன் படைப்பான ராமாயண காவியத்தில் வரும் ஹிரண்யவதை படலத்தில், ஸ்ரீ நரசிம்ம அவதாரம் குறித்து விவரிக்கையில் "திசைகள் திறந்து அண்டம் கீறி சீறி சிரித்தது செங்கண் சீயம்" என்று நரசிம்ம அவதாரத்தை பெருமைப்படுத்துவார்.

பகவான் கண்ணன் தனது இளம் பிராயத்தில் குருகுல வாசம் புரிந்த போது அவருடைய சத்குரு வான சந்திப்பான் என்பவரிடமிருந்து நரசிம்மரின் மூல மந்திரத்தை உபதேசிக்கப் பெற்றார்.

அதன் பலனாக கண்ணன் கோடி நாகங்களின் சக்தியைப் பெற முடிந்தது. அதன் மூலம் தான் பகவான் தனது அவதார கால கண்ணனாக சிறு வயதில் கொடிய விஷங்கொண்ட காளிங்கனை அடக்கி அவன் மீது நின்று, ஆனந்த அற்புத  நடனம் புரிந்தார்.



அதனை "காளிங்க நர்த்தனம்" என்று சிறப்பாக கூறுவார்கள்.

ராமாவதாரக்காலத்தில் நடைபெற்ற பெரும் யுத்தத்தில் லட்சுமணன் மயக்கம் அடைய, அதற்காக இமயமலையிலிருந்து பெயர்த்துக்கொண்டு வந்த சஞ்சீவி மலையை, அதற்குரிய காரியம் முடிந்ததும், மீண்டும் இமயம் எடுத்துச் சென்ற போது அனுமனுக்கு கண்ட கிந்தியில் கிடைக்கப்பெற்ற சாளக்கிராமத்தை பூஜித்து வழிபடுகிறார்.

பின்பு  அதனை நாமக்கல்லுக்கு எடுத்துச் செல்கிறார். அதுவே நாமக்கல் நகரில் வழிபாடு ஆகும் ஸ்ரீ நரசிம்மர் கோயில்.

ஒரு சமயம் ஸ்ரீ பரசுராமரின் தந்தையான ஜமதக்னி மகரிஷிக்கு "ஜ்வாலை" உருவில் ஸ்ரீ நரசிம்மர் காட்சி தந்ததை நங்கை நல்லூரில் கோயில் கொண்ட ஸ்ரீ நரசிம்மர் திருக்கோயிலின் தல புராணம் மூலம் அறிய முடிகிறது.

தனது தீவிர பக்தன் பிரகலாதனைக் காப்பாற்றுவதற்காகவும், அவனுடைய தந்தை அசுரன் ஹிரண்யனை வதம் புரியவும், பகவான் மகாவிஷ்ணு நரசிம்ம அவதாரம் எடுத்தார் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

தன் பக்தன் பிரகலாதனுக்காக பகவான் எடுத்த நரசிம்ம அவதாரம் பூமியில் தங்கியிருந்தது சில காலமே. எனவே இந்த அவதார திருக் கோலத்தை தாங்கள் தரிசிக்க வேண்டுமே என வானுலகத் தேவர்களும், மகரிஷிகளும் ஆசைப்பட்டனர்.

எனவே இத்தகையோர்கள் வெவ்வேறு இடங்களில் கடுந்தவமிருந்தனர்,

எனவே அவர்களுக்கு பகவான் அனுக்கிரகம் செய்யும் வகையில் தனது முந்தைய ஸ்ரீ நரசிம்மர் திருக் கோலத்தை மீண்டும் அவர்களுக்கு காட்டி அருள் புரிந்தார்.
அப்படி பகவான் அருள் புரிந்த ஊர்களை "பிரத்யட்ச ஷேத்திரங்கள்" என்று போற்றினார்கள்.
அந்த பிரத்யட்ச தலங்களில் ஒன்றாக திகழ்கிறது சிங்க பெருமாள் கோயில் என்ற தலம். இவ்வூர் சென்னை மாநகருக்கு தெற்கே தேசிய நெடுஞ்சாலையில் (செங்கல்பட்டு அருகே) 48 வது கீ.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இத்தலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அடங்கும்.
ஸ்ரீ ஜாபாலி மகரிஷி இத்தலத்தில் கடுந்தவம் மேற் கொள்ள, ஸ்ரீ நரசிம்மர் இங்கே அவருக்கு தன் திருக் காட்சியைக் காட்டி அருளினார்.

"சிங்கப் பெருமாள் கோயில்" தலத்தில் குடி கொண்ட நரசிம்மரின் திருநாமம் "பாடலாத்ரி நரசிம்ம ஸ்வாமி" என்பது,
பாடலம் என்பது சிவப்பு வண்ணத்தைக் குறிக்க அத்ரி, யானது மலை என்பதை குறிக்கும்.
மாமுனி ஜாபாலிக்கு நரசிம்மர் இங்கே கோப மூர்த்தியாக அருட்காட்சியருளியதால், பகவான் இப்பொழுது குடி கொண்டுள்ள சிறு குன்று சிவப்பு நிறத்திலேயே உள்ளது.
ஸ்ரீ நரசிம்மர் த்ரி நேத்திர தாரியாக (மூன்று கண்களுடன்) சிங்கப் பெருமாள் கோயில் தலத்தில் எழுந்தருளியுள்ளார். பிரம்மாண்ட புராணத்தில் இத்தலம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

சுமார் 1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிங்கப் பெருமாள் கோயில் ஆலயத்தில் ஸ்ரீ நரசிம்மர் தனது மேல் இருதிருக்கரங்களில் சங்கு சக்கரம் பூண்டும், கீழ் வலது கரத்தில் அபயஹஸ்தம் காட்டியும், கீழ் இடக்கரத்தை தனது தொடை மீது வைத்தும், ஒரு காலை மடித்து மறு காலை தொங்கவிட்ட வண்ணமும் கம்பீரக் காட்சியளிக்கிறார்!

அவருடைய தலையில் மணி மகுடம் ஜொலிக்க, மார்பில் ஸ்ரீ மகாலட்சுமியை தாங்கியுள்ளார்.
இத் திருக்கோயிலில் குடி கொண்ட தாயாரின் திரு நாமம் ஸ்ரீ அஹோபிலவல்லித்தாயார் என்பது, தவிர இவ்வாலயத்தில் தனிச் சந்நிதிகளில் ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீ லெட்சுமிநரசிம்மர், பிற ஆழ்வார்கள், ஆச்சார்யார்கள், கருடாழ்வார் ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர். இவ்வாலய தல விருட்சமாக பாரிஜாத மரம் உள்ளது,
தினசரி காலை 7 மணி முதல் 11.30 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையும் தரிசன காலம்.
மணமாகாதோர்களுக்கும், குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கும் அருளும் பகவானாக ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி திகழ்கிறார்.
நிகழும் ஸ்ரீ ப்லவ ஆண்டில் வரும் வைகாசி மாத சதுர்த்தசி திதியும் இடம் பெற்ற விசாக நட்சத்திர புண்ணிய தினத்தில், "ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி" நாடெங்கும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்..

~ கீதாமணி

# அப்பூதியடிகள் நாயனார்

அன்பு "சத்வித்யா" வாசகர்களே! ஒரு மனிதன் தன்னுடைய அசாத்திய பக்தியினாலும் இறைவன் மீது கொண்ட அளவற்ற பக்தியினாலும் உயர் நிலையடைந்து தெய்வத்திற்கு இணையாக போற்றப்படுவது எவ்வாறு?

இந்த கேள்விக்கு சரியான விடை தெரிய வேண்டும் என்றால் நாயன்மார் வரலாறே நமக்கு துணை நிற்கும்! எப்படி இருந்தால் இறைவனின் திருப்பாத நிழலிலே நாம் தஞ்சம் கொள்ள முடியும்? என்பதை அறிந்து கொள்ளும் விதமாக தான் நமது இதழில் நாயன்மார்களின் வரலாற்றினை வாசகர்கள் படித்து பயன்பெறும் முகமாக வழங்குகின்றோம்.



சிவ பெருமானையே பரம் பொருளாய் எண்ணி, சிந்தை முழுவதிலும் சிவத்தை வைத்து, கைலாயத்தின் தரிசனம் காணுவதே தம் வாழ்வின் குறிக்கோள் என வாழ்ந்து சிவப்பரம் பொருளோடு ஜீவனை ஐக்கியமாக்கிக் கொண்ட அடியார்கள் இப்பூவுலகில் ஏராளம்!

அது போலவே, திருமாலின் புகழ்பாடி, எட்டெழுத்து மந்திரமே இம்மையிலும் மறுமையிலும் உடன் வரும் என்று அரங்கனின் அடிகளை சரணடைந்தோரும் ஏராளம்

ஆனால், இங்கு நாம் பார்க்கப்போகும் ஒரு நாயன்மார், இறைவனின் திரு நாமத்தை மனமுருகி சொன்னதைக் காட்டிலும்....இறைவனின் பெரும்புகழை பாடியதைக் காட்டிலும் ஒரு சாதாரண மனிதப் பிறவி எடுத்த மானிட ஜீவனை போற்றினார் பாடினார் துடித்தார்! இறுதியில், இறைவன் எம் பெருமானின் நிகரற்ற கருணையால் அவர் திருவடியினை அடைந்தார்!

இதை எண்ணும் போது, ஒரு மானிடப் பிறவியின் மேல் பக்தி கொண்டதால் இறைவன், இவருக்கு முக்தி நிலை அளித்தாரா? அப்படியென்றால், மானிடப் பிறவியெடுத்த அந்த மகான் யார்? அவரைத் துதித்த ஒருவருக்கு முக்தியா? என்கிற கேள்வி எழலாம்?

இங்கு தான் நாம் ஒன்றை கவனிக்க வேண்டும்! இறைவன் ஈசனை அடியார்க்கு அடியான் என்று ஆன்றோர்கள் கூறுவார்கள்.

"மனிதன் தனக்கு பணி செய்வதை, இறைவன் ஏற்பான்! ஆனால், தன் அடியவர்க்கு பணி செய்வோரை அகங்குளிர காப்பான்!"

அதனால் தான் சைவநெறியில், "தொண்டர்களின் உள்ளத்துள் உறைபவன் இறைவன்," என சைவ

சித்தாந்தம் கூறுகிறது. அப்படி, சிவனடியார்பால் பற்றுக் கொண்டு, அந்த தொண்டரைப் போற்றிய ஒரு தூயவரை, இறைவன் நாயன்மாராய் ஆட்கொண்ட வரலாறு இது!
அந்த நாயனார், அப்பூதி அடிகள்!

கும்பகோணத்திலிருந்து திருவையாறு செல்லும் வழியில் அமைந்துள்ளது, திங்களூர் என்னும் திருத் தலம்!
அவ்வூரில்.....
இறைவன் ஈசனின் பால் பற்றுக் கொண்டு, எளியோரை காக்கின்ற பண்புகொண்டு, நெறி தவறாமல் திரட்டிய செல்வம் கொண்டு, தன் தர்மப் பத்தினியோடும் தலை முறை நிலைக்க ஒரு மகனோடும் சிவநெறிச் செல்வராய் இல்லறம் நடத்தி வந்தார், அப்பூதி அடிகள் என்னும் உயரிய சிவபக்தர்!

ஆலயத்திற்கு சென்று சிவனை தரிசனம் செய்வார் ஆனால், இவரது சிந்தையில் முப்போதும் இருப்பது வேறொருவர் திரு நாமம்! அவர் யார்?
'கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமசிவாயவே' என்று அனுதினமும் ஆண்டவனின் ஐந்தெழுத்து மந்திரத்தையே உச்சரிக்கும் அப்பர் என்கிற திருநாவுக்கரசர் தான்!
அந்த நாவுக்கரசரைத்தான் தான் வணங்கும் ஈசனுக்கு இணையாக பூஜித்து வந்தார் அப்பூதியடிகள்!
திருநாவுக்கரசரிடம் அப்படி எதனைக் கண்டார், அப்பூதியடிகள்??

இவர், நாவுக்கரசரை அதுவரை கண்டதே இல்லை!
இதுவரை கண்ணால் கூட கண்டறியாத அப்பரின் மீது ஆண்டவனை விட அதிக பக்தியோடு இருந்தார், அப்பூதியடிகள்!
எப்படி தெரியுமா?......திங்களூரில்.......
மக்களின் தாகம் தீர்க்க தண்ணீர்ப் பந்தல், மோர்பந்தல் அனைத்திற்கும் நாவுக்கரசர் பெயர்!
சைவநெறிகளை பரப்ப நாவுக்கரசர் பாடசாலை, வழிப் போக்கர்களின் பசிதீர்க்க, நாவுக்கரசர் அன்ன சத்திரம்!

தன் உழைப்பால் சம்பாதித்த அத்தனை செல்வத்தையும் எளியோர்க்கு வழங்கிய அப்பூதியடிகள், தன் பெயர் வெளியே தெரியாமல் எல்லாவற்றையும் சைவப் பழமாய் விளங்கிய, இறைவனின் தொண்டர் நாவுக்கரசரின் பெயராலேயே அத்தனை தர்ம காரியங்களை செய்தார்! அதுமட்டுமா?
அவரது இல்லத்திற்கு "நாவுக்கரசர் மாளிகை" என்று பெயர்! தங்கள் ஒரே மகனுக்கும் நாவுக்கரசன் என்றே பெயர் சூட்டி மகிழ்ந்தார்!
"நாவுக்கரசா" என அழைத்தால் மகனுக்கு முந்தி அவர் வீட்டு மாடு, தலையுயர்த்தி "மா" என கத்தும்! அந்த மாட்டுக்கும் அப்பரின் பெயர் தான்!
இறைவன் மீது பக்தியென்றால் அவரது பெயரை அனைத்திற்கும் வைத்து இன்புறலாமே! இவரோ, ஒரு அடியவரின் பெயரையல்லவா வைத்து கொண்டாடுகிறார் அதிலும் அந்த முதுபெரும் அடியாராம் நாவுக்கரசரை பார்க்கமாலே இத்தனை பக்தியா? ஆம்!
இறைவனின் அடியார்களிலேயே அப்பர் என்கிற திருநாவுக்கரசரின் இறைப்பணி, அப்பூதியடிகளை

ஈர்த்து விட்டது! சிவனை வணங்குவதும் தூய சிவத்தொண்டரான அப்பரை வணங்குவதும் ஒன்றே என உள்ளத்தால் உணர்ந்து, அப்பரை வணங்கி வந்தார்!

ஒரு நாள்.....
அப்பூதியடிகளின் ஆன்மாவை குளிரவைக்கும் ஒரு செய்தி வந்தது அதாவது....திங்களூருக்கு நாவுக்கரசர் வருகை தரவிருக்கிறார் என்கிற நற்செய்தி தான் அது!
பிறவியின் பெரும் பயனை அடையப் போவதாய் அகமகிழ்ந்தார் அப்பூதியடிகள்! அப்பரை வரவேற்று உபசரிக்க, ஆனந்தம் பொங்க காத்திருந்தார்!

தன் பெயரால் இத்தனை தர்ம காரியங்களா? யார் அந்த அப்பூதியடிகள்? அவரைக் கண்டே ஆக வேண்டும் என்னும் ஆவலோடு அப்பரும் திங்களூர் வந்தார்!

அப்பரை வரவேற்ற அப்பூதியடிகள், தன்னுடைய துணைவியாரோடு சேர்ந்து, அவருக்கு பாத பூஜை செய்து பணிவிடைகளை மேற்கொண்டார்?


விருந்து தயாரானது் கொல்லைப் புறத்தில் இருக்கும் வாழை மரத்தில் விருந்துண்ண வாழை இலை அறுத்து வரும் படி, தன் மகனான நாவுக்கரசனை அனுப்பினார்! அங்கே.....அவனை நாகம் தீண்டியதால் மரணமுற்றான்! தங்கள் ஒரே மகனின் இறப்பு ஒரு பக்கம்! தெய்வத்திற்கு இணையான அப்பர், விருந்துக்கு வருவது மறுபக்கம்! அழுகையைக் கூட, வெளிக்காட்டாமல் அப்பர், விருந்தை அருந்தி, முடிக்கும் வரை மகனின் இறப்பை வெளியே சொல்ல வேண்டாம் எனக் கருதி, மகனின் உடலை மூடி வைத்துவிட்டு, நாவுக்கரசரை வரவேற்று இலை போட்டு, விருந்து பரிமாறினார். அப்பரோ, எங்கே உங்கள் மகன் நாவுக்கரசன் எனக் கேட்டார்! அவர் கேட்டது தான் தாமதம் அணை உடைத்த வெள்ளம் போல் கண்ணீர் விட்டு கதறி, மகன் இறந்ததை அப்பரிடம் சொன்னார்கள். பதறிய அப்பர், "மகனின் உடலை மறைத்து வைத்து விட்டு இந்த பரதேசிக்கு விருந்தா? என்ன கொடுமை இது!? என துடித்தார்!

இறைவனை நினைத்து உள்ளன்போடு பதிகம் பாடினார் பதிகத்தைக் கேட்ட பரமன் இறங்கினான். இறந்த மைந்தன் உயிர் பெற்றான்! தங்கள் ஒரே செல்வனை உயிர்ப்பித்துக் கொடுத்து குலத்தையே காத்த குல தெய்வம் என அப்பரை பணிந்து, வணங்கி, கொண்டாடினார்! இங்கு தான் இறைவனின் அருள் ஒளி இன்பத்தை அளித்தது் ஆம்! இறைவனை வணங்கிய நாவுக்கரசருக்கு முன்னமேயே, இறைவனின் தொண்டரான அவரைக் கொண்டாடி, தொண்டாற்றி மகிழ்ந்த அப்பூதியடிகளை, இறைவன் நாயன்மார்களில் ஒருவராக்கி, நலம்புரிந்தார் எனவே....இறைவனின் தொண்டர்க்கு நாம் செய்கின்ற தொண்டே நம்மை இறைவனிடம் விரைந்து சேர்க்கும்! இதற்கு அப்பூதியடிகள் நாயன்மாரே சான்று!

~ ரா. பன்னீர்செல்வம்

# வியப்பூட்டும் மகான்கள் !
# யாமென்றறியோம் பராபரமே !

"அருளால் எதையும் பார் என்றான் - அத்தை
அறியாதே சுட்டி என அறிவாலே பார்த்தேன்,
இருளான பொருள் கண்ட தல்லால் - கண்ட என்னையும் கண்டிலன், என்னேடி தோழி"



இப்பாட்டை ஒரு பாட்டுடைத் தலைவி தன் தோழியைப் பார்த்து கூறுவதாக எழுதப்பட்டுள்ளது.
"ஒரு காட்சியை அருள் கொண்டு பார்க்காமல், தான் அறிவால் காண்கையில், தனக்குப் புலப்பட்டது இருள் தான். தவிர அப்படி இருள் கண்ட என்னையும், அங்கே பார்த்தேனில்லையே, இது என்ன புதுமையடி என் அருமைத் தோழியே" என்பது அப்பாடல் கொண்ட கருத்தாகும்.
இப்படி அருள் குறித்து அருளிய பெருமான் யார் தெரியுமா? "தாயுமானவர்" தான் அவர். அக்காலத்தில் புகழ் பெற்ற திருச்சிறார்பள்ளி நாட்டை நாயக்க வம்ச அரசன் ஆண்டு வந்தான். திருமறைக் காடு எனும் கூடுதல் பெயரைக் கொண்ட வேதாரண்யம் தலத்தில் சிறந்த கல்விமானாகவும், சிவ பக்தியுடையவராகவும் விளங்கியவர் சைவ வேளாள குலத்தில் பிறந்த கேடிலியபிள்ளை என்பவர். அவர் சிவாலய தர்மகர்த்தராகவும் பணி புரிந்து வந்தார். இவர் பிள்ளைப்பேறு அற்று மனம் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த தனது தமையனாரின் மீது இரக்கங்கொண்டு, தன்னுடைய மனைவியின் ஒப்புதல் பெற்று, அப்போதைய தனது ஒரே மகனை சுவீ காரமாக தந்து விட்டார். ஆனால் இறைவனை தனக்கு இன்னொரு பிள்ளை வாரிசாகப் பிறக்க வேண்டும் என சதா வேண்டிக் கொண்டே இருப்பார்.
தற்செயலாக வேதாரண்யம் கடலில் நீராட திருச்சிராப்பள்ளி மன்னன் வந்தபோது, அவனை சந்தித்த கேடிலியப்பிள்ளையின் கல்வித் திறனும், செயலாற்றும் முறையும் அவருக்குப் பிடித்து விடவே, அவரை அரசாங்க உயர் பதவியில் அமர்த்த, தன்னோடு தலை நகருக்கு அழைத்துச் சென்று விட்டார். அதனால் அவர் குடும்பம் திருச்சிராப்பள்ளிக்கு குடி பெயர்ந்தது.
தன் வழக்கப்படி தினந்தோறும் சிவ தரிசனம் பெற கேடிலியப்பிள்ளை, அவ்வூரில் குடிகொண்ட தாயுமானவ ஸ்வாமியை தரிசித்து வந்தார். அவரது பிராத்தனையில் வழக்கம் போல் ஒரு ஆண் வாரிசு

வேண்டுமென்பது இடம்பெற்று வந்தது.
சிவ பிரான் அருள் பார்வை பார்க்க, கேடிலியப்பிள்ளைக்கு அவர் பிராத்தனைப் படியே ஆண் குழந்தை பிறந்து, அதற்கு தாயுமானவன்  என்ற பெயரையே சூட்டி மகிழ்ந்தார் அவர்.  இளம் பிராயம் முதலே சுட்டியாக வளர்ந்த தாயுமானவன் தமிழ் மற்றும் வட மொழியில் உள்ள முக்கிய பல நூல்களைக் கற்று திறமை சாலியாக விளங்கினான். தவிர சிறு பிராயத்திலேயே "கவி" இயற்றும்  திறன் அவனை ஒட்டிக் கொண்டது.
இளம்பிராயம் முடிந்து வாலிபனான தாயுமானவர், அழகிய தோற்றத்துடன் அறிவுக் கூர்மையுடன் திகழ்ந்தார். அவருடைய தகப்பனார் இறந்தவுடன், நாயக்கமன்னன், தாயுமானவரை நன்கு எடைப்போட்டு, அவருக்கு தனது அரசாங்க "பெருங்கணக்கர்" பதவியைத் தந்து கௌரவப்படுத்தினார். தன் பதவியில் நன்கு பணியாற்றி அவர் நல்ல பெயர் வாங்கினாலும், அவரது மனதை சிவ பக்தியே பெரிதும் நிரம்பி அலைக் கழித்து வந்தது. இந்நிலையில்  தனக்கு ஒரு நல்ல குருநாதர் வழிகாட்ட கிடைத்தால்  நல்லதாயிற்றே என அவர் மனம் ஏங்கத் தொடங்கிவிட்டது.

அதற்கான ஒரு சந்தர்ப்பம் கனிந்துவிட்டது. ஒரு நாள் வெளியூரிலிருந்து திருச்சி மலைக் கோயிலுக்கு மௌன குரு தேசிகன் என்பவர் வந்திருந்த போது, அவரை தரிசித்த தாயுமானவர், அந்த குரு தன் கையில் பத்திரப்படுத்தியிருந்த நூல்  ஒன்றை பார்த்து விட்டார். நூல் என்றால் அதனை ஆவலோடு படிப்பதில் ஆர்வங்காட்டும் தாயுமானவரின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட ஸ்வாமிகள் இந்நூல் கொண்ட பெயர் சிவ ஞானசித்தியார்  என்பது. சிவஞான போதநிலை அனுபவம் பெற இது உனக்கு உதவிகரமாக அமையும் என்று கூறி ஆசிர்வதித்து தாயுமானவரிடம் அளிக்க, அவர் பரவசமுடன் வணங்கி அதனைப் பெற்றுக்கொண்டார்.

தினமும் சிவ பூஜையை தவறாது செய்வதுடன் அந்த நூலை தினமும் பொருளுடன்  பரயாணம் செய்து வருவதுடன், மலைக்கோட்டைக்கு  தவறாமல் சென்று மௌனகுரு நாதரையும் வணங்கி வந்தார். தாயுமானவர். அவருடைய சிவ பக்தியை பூரணமாக அறிந்து கொண்ட ஸ்வாமிகள், "நீ ஏற்றுள்ள அரசு பணியை சரிவர செய்து, குடும்ப வாழ்வையும் நடத்தி வா, உனக்கு புதல்வன் உண்டு. பின்பு உரிய காலத்தில் நாம் மீண்டும் சந்திக்கையில் "நீ என்னிடம் எதிர்பார்க்கும் குருநாதரின் உபதேசம் கிடைக்கும்" என்று அருளிவிட்டு திருச்சி மாநகரை விட்டு கிளம்பி விட்டார்.

நாளடைவில், தாயுமானவரின் சிவ பக்தியின் முதிர்ச்சியை நன்கு புரிந்து கொண்ட நாயக்க மன்னன், தான் மரணமுறும் வரை அவரை நன்கு போற்றி மதித்து வந்தார். பிள்ளை வாரிசு இல்லாத நிலையில் அரசாங்க வேலைகளை  நாயக்க மன்னனின் பட்டத்து ராணியே ஏற்று நடத்தி வந்தார். விதவையாகிய ராணிக்கு வாலிபமும், சுந்தரமுகமும் கொண்ட தாயுமானவர் மீது விபரீத ஆசை வந்துவிட்டது. இதனை வெளிப்படுத்தும் வகையில் அவள் ஒரு நாள் "இனி எனக்கு தாங்களே தலைவர்" எனக் கூசாமல் கூற, திடுக்கிட்டுபோன தாயுமானவர் சரசரவென அவ்விடத்தை விட்டு ஏதும் சொல்லாமல் வெளியே வந்துவிட்டார்.

இனி அவ்வூரில் இருந்தால் அரசியின் தூண்டு கோல்கள் தொடரும் என்பதால், தாயுமானவர்

திருச்சிராப்பள்ளியை விட்டே வெளியூருக்கு அன்றே புறப்பட்டு விட்டார். தன் தம்பிமுறை உறவுகொண்ட அருளையர் உதவியுடன் அதற்குப் பிறகு, அவர் மீது மோகங்கொண்ட அரசி மந்திரவசிய முறைகளை வேறொருவர் மூலம் செய்து பார்த்தும், தோல்வியைத் தான் தழுவ நேர்ந்தது அவள்.

அதன்பின்பு, தாயுமானவர் தனது தம்பியுடன் பல ஊர்களுக்குச் சென்று சிவ தரிசனம் பெறுவதை வழக்கமாகக் கொண்டு சுற்றிக் கொண்டிருந்தார்.



வேதாரண்யத்தில் தன் மகனை பிரிந்து வாடிக் கொண்டிருந்த தாயுமானவரின் அன்னை தத்து கொடுக்கப்பட்ட தன் மூத்த பிள்ளை சிவ சிதம்பரத்தைச் சந்தித்து எங்கிருந்தாலும் தனது பிரம்மச்சாரி பிள்ளையை மீட்டு அழைத்து வா என முறையிட, அவரும் அப்பணியில் தீவிரமாக ஈடுபட்டார்.
பலத்த முயற்சிகளுக்குப் பிறகு ஒரு நாள் தாயுமானவரைக் கண்டுபிடித்து அழைத்து வந்து அவரை தங்கள் அன்னையர் முன்பு நிறுத்தினார் சிவசிதம்பரம். அவர்களுடைய அன்னையின் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில், தாயுமானவர் மட்டுவார் குழல் அம்மை என்ற பெண்ணை மணந்து கொண்டார்.

சிலகாலம் தாயுமானவரின் இல்லற வாழ்வு இனிதே போய்க் கொண்டிருந்தது. மட்டுவார் குழலம்மை ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்தவள், திடீரென இறந்துவிட்டாள். ஏற்கனவே, ஞான மார்க்கத்தை தேடும் அவர், இப்பொழுதெல்லாம் தனது முழுமனதையும் அதில் செலுத்த ஆரம்பித்து விட்டார், தவிர என்று தனது குருநாதரான மௌனகுரு, ஸ்வாமிகளை காண்போம் எனவும் ஏங்கத் தொடங்கி விட்டார். இதற்கிடையில் அவருடைய அன்னையும் மாண்டு விட்டாள்.


அந்த சரியான நேரத்தில், வேதாரண்ய யாத்திரைக்கு வந்தார் மௌனகுரு, அவரை ஆவலுடன் தரிசித்து நமஸ்கரித்து நின்றார் தாயுமானவர். தனது சீடன் முழுப்பக்குவ நிலையைப் பெற்றுவிட்டான் என்பதை புரிந்து கொண்டு விட்ட மௌனகுரு, மெய்ஞான நிஷ்டை, சிவயோக ரகசியத்தை தாயுமானவருக்கு அருள, அவர் அன்று முதல் துறவற நிலையை ஏற்றுக் கொண்டார்.
தென்னகத்தின் பல தலங்களுக்கு யாத்திரை சென்ற தாயுமானவர், பல இறை தரிசனங்களை பெற்று ஆனந்தத்தோடு பொது மக்களுக்கு சிவ பக்தியை ஊட்டுவதிலும் மிக்க ஆர்வங்காட்டினார்.
தாயுமானவர் ராமநாதபுரம் அருகில் உள்ள கீழ்பால் காட்டூரணி சிற்றூருக்கு வந்த போது அவ்வூரில் தனித்துக் காணப்பட்ட புளிய மரத்தையே நாடி அதன்கீழ் அமர்ந்து நீண்ட நிஷ்டை புரிவதை தன் வழக்கமாகிக் கொண்டாராம்.

தாயுமானவர் அப்படி ஒரு நாள் நீண்ட நிஷ்டையில் இருக்கையில் (நிர்விகல்ப ஸமாதி) இவர் இறந்து விட்டதாகக் கருதிய சில ஆடு மாடு மேய்ப்பவர்கள், அந்நாட்டு அரசனுக்குச் சேதி சொல்ல, அதை சரியாக ஆராயாத மன்னன் "அந்த உடலை எரித்து விடுக" என்ற ஆணை பிறப்பித்தான்.
அதனால் உயிருடன் தாயுமானவர் எரிக்கப்பட்டார் எனவும், அந்த மெய்ஞானியார் சமாதியாகியிருக்கலாம் எனவும் வரலாறு கூறுகிறது.
தாயுமானவரின் மறைவு குறித்து சில முரண்பாடான செய்திகளும் உண்டு.
தாயுமானவரின் சிவ தத்துவம் அடங்கிய புகழ் பெற்ற நூல்களில் அவர் பாடியருளிய "பாரபரக்கண்ணி" சிவநேயச் செல்வர்களின் உள்ளத்தில் என்றும் இடம் பெற்றுள்ள சிறப்பினைக் கொண்டதாகும் "எவரும் இன்புற்றிருக்கேயல்லாமல் யானொன்றும் அறியேன் பராபரமே" என்ற புகழ்பெற்ற சொல்லை எவரே மறக்க வல்லார்!

காகம் உறவு கலந்துண்ணக்
கண்டீர்; அகண்டா காரசிவ
போகம் எனும்பே ரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குதையோ
இன்புற் றிட நாம் - இனி எடுத்த
தேகம் விழுமுன், புசிப்பதற்குச்
சேர வாரும் செகத்தீரே!

- தாயுமானவர் பாடல்

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்
துணை கலெக்டர் (ஓய்வு)



# அம்மான் பச்சரிசி

சாலையின் ஓரங்களிலும் நீர் நிலை., கிணற்றின் ஓரங்களிலும் செழித்து வளரக் கூடிய மிக எளிமையான தாவரம். அம்மான் பச்சரிசி என்னும் அற்புத தாவரம். மிகவும் எளிமையாக - அனைத்து இடங்களிலும் கிடைக்கக்கூடிய இந்த மூலிகை, மனித உடலை நலமுடன் பாதுகாக்கும் வல்லமை பெற்றதாகும்.
இந்த அரிய மூலிகையின் பயன்பாடுகள் என்ன என்பதனை பார்க்கலாம்.

### குணமாக்கும் நோய்கள்:

அல்சர், வயிற்றுவலி, உதடு வெடிப்பு, வாய்ப்புண், நாக்குப்புண், கொப்புளம், கால் வீக்கம், ஆண், பெண் இனப்பெருக்க மண்டலங்களில் ஏற்படும் பாதிப்புகள், உடல் சூடு போன்ற சாதாரணமாக காணப்படும் பலவித நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது இந்த அம்மான் பச்சரிசி என்னும் மூலிகை

### பயன்படுத்தும் முறை:

இதன் 5 இலைகளை எடுத்து அரைத்து, நாள்பட்ட, கொப்புளம், கால் வீக்கம் இவற்றின் மீது பற்று போட மூன்றே நாளில் குணமாகும்.
இதன் இலைகளை பாசிப் பயிறுடன் கலந்து நெய் சேர்த்து சாப்பிட, குடல்புண் எனப்படும் அல்சர், அதனால் ஏற்படும் வயிற்றுவலி நீங்குவதோடு மலக்குடல் சுத்தமாகும்.



கை, கால், கழுத்து, முகம் என மரு வந்து அவதிப்படுவோர், இதன் காம்பை உடைத்து, அதில் வழிகிற பாலை வைத்தால் ஒரே இரவில் மரு உதிர்ந்து விடும்.

கைப்பிடி அளவு இலையை எடுத்து பசும்பாலில் கலந்து அரைத்து தினமும் காலையில் சாப்பிட உடல் சூடு குறைவதோடு குடலும் சுத்தமாகும்.

இலையை பசும்பாலில் கலந்து அரைத்து 21 நாட்கள் காலையில் குடித்து வர ஆண்களின் இனப் பெருக்க சக்தி அதிகரிக்கும். பெண்களுக்கு கருப்பை பலப்பட்டு மகப்பேறு வாய்க்கும்.
இத்தனை அபூர்வ சக்திகள் கொண்ட ஆபூர்வ மூலிகையை அனைவரும் பயன்படுத்தி நலம் பெறுங்கள்.

~ ரா. பன்னீர்செல்வம்

# ஸ்ரீ சீனுவாசப் பெருமாள் வாசம் செய்யும் ஸ்ரீ சப்தகிரி!

பொறுமையுடன், வாஞ்சையுடன் கூடிய சாந்தமான உள்ளம் படைத்தவன் எங்கும் நிச்சயம் பூஜிக்கப்படுவான்!

அலங்காரப் பிரியரான ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் சத்தியத்தை காக்கவே ஸ்ரீ சத்திய நாராயணராக திருமலையில் நின்ற கோலத்தில் அருட்காட்சி அளிக்கின்றார்!

பச்சை மாமலை போல் மேனி பவளவாய்க்
கமலச் செங்கண்



அச்சுதா!அமரறேறே! ஆயர்தம் கொழுந்தே!- என்னும்

இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே

என்று தொண்டரடி பொடியாழ்வார் அருளிச் செய்கின்றார்.

108 திருப்பதிகளில் மிகச் சிறந்த திருப்பதி திருமலை எனப் பெறும் ஏழு மலை! கண்கண்ட தெய்வமான மலையப்ப சுவாமியை

"தூயேமாய் வந்து நாம் தூ மலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும்" என்கிறாள்

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாம் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் தம் திருப்பாவையில்,

"பெருமாளை உலகினில் தோற்றமாய் நின்ற சுடர்"
அடியவர்களுக்கு ஊற்றமுடையாய் பெரியாய்!

என்பதாலே போற்றியாம் வந்தோம் புகழ்ந்து என்று உருகியே வழிபட்டு கீழ்த் திருப்பதியிலிருந்து ஒவ்வொரு படியாக பணிந்து வணங்கி மலையேறி வந்து தரிசிக்கின்றோம்.

நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் ஸ்ரீ வெங்கடேச பெருமாளைப் பற்றி பாடும் போது திரு மங்கை அழ்வார், பெருமாளை "அண்ணா" என்று உறவுமுறையுடன், உரிமையுடன் அழைக்கின்றார்

மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவும் ஆகாசமுமாம் புண்ணார் ஆக்கை தன்னுள் புலம்பித தளர்ந்து எய்த் தொழிந்தேன் விண்ணார் நீள் சிகர விரையார் திருவேங்கடவா! அண்ணா வந்தடைந்தேன் அடியேனை யாட் கொண்டருள!

கண்ணார் கடல் சூழ் இலங்கைக்கிறைவன் தன் திண்ணாகம் பிளக்கச் சரஞ்செல உய்த்தாய் விண்ணோர் தொழும் வேங்கடமா மலைமேய அண்ணா அடியேன் இடரைக் களையாயே! என்று நெஞ்சுருக பாடிக் களிக்கின்றார்.

தியாக ராஜ சுவாமிகள், சத்குரு சுவாமிகள், கோபாலகிருஷ்ண பாகவதர் போன்றோர் பெருமாள் குறித்த பாசுரங்கள் எழுதியுள்ளனர் பெருமாள் மீது தீவிர பக்தி கொண்ட ஆன்றோர்கள் ஸ்ரீ வெங்கடேஸ்வராஷ்டகம், ஸ்ரீ நிவாச அஷ்டகம் போன்றவற்றை பெருமாள் அனுக்கிரகத்தால் அருளிச் செய்துள்ளார்கள் பெருமானிடத்தில் பரிபூரண சரணாகதியாகி, தம்மையே முழுதாக அர்ப்பணித்து விடுகிற சமயத்தில் திருமால் திருவருள் சித்திக்கும்.

மலர்ந்த செந்தாமரை போல் நீண்ட கண்களும், நீருண்ட மேகம் போல் திரு மேனியும், அணிகலன்கள், அழகு நிறை பட்டும் அணிந்தும், அழகான மார்பில் ஸ்ரீ தேவியை வைத்து இருப்பவரும், துளசி மாலை அணிந்தவரும் சங்கு சக்ர கதா தாரியாய் அருட்காட்சி அளிக்கும் அழகே அழகு! திருமுடி முதல் திருவடி வரை பேரழகு! காண கண் கோடி வேண்டும்.

கோவிந்தன் குறையே இல்லாதவனாக இருந்தாலும் பக்தர் தம் குறைகளை களைபவன்!

கோவிந்தா கோவிந்தா என்று அன்பின் உச்சத்தில் அகமும் முகமும் மலர அழைக்கும் போது வராமலா போய்விடுவான்? வரம் அருளாமலா போய்விடுவான்?

குறைவொன்றுமில்லாத கோவிந்தனை எப்படி எல்லாம் ஸ்ரீ ஆண்டாள் போற்றுகின்றார் பாருங்கள்!

சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றவேல் எங்களைக் கொள்ளாமற் போகாது இற்றைப் பறை கொள்வானன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றமே யாவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்
மற்றை நங்காமங்கள் மாற்றலோ ரெம்பாவாய்

பக்தி நனி சொட்ட சொட்ட பாடி உருகும் ஸ்ரீ ஆண்டாளின் இந்த திருப்பாவையின் ஒரு பாசுரத்தை உள்ளமுருக பாடினாலே போதும் திருமலை தெய்வத்தின் பரிபூரணமான பேரருள் துணை நிற்கும்.

திருப்பாவையில் உள்ள முப்பது பாசுரங்களும் இரத்தினங்களாகும்.

கண்ணனையே தன் கணவனாக கருதியவள் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் திரு மொழியே இதற்கு சான்று.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றுத
முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தற் கீழ் மைத்துனன் நம்பி மது சூதன் வந்து என்னைக் கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான்.

என்று ஆண்டாளின் கனவு மேய்ப்பட்டது ஸ்ரீ ஆண்டாளின் அளப்பரிய பேரன்புதானே பெரும் பக்தி தானே

கற்பூரம் நாறுமோ கமலப் பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ
மருப் பொசித்த மாதவன் தன் வாய்ச் சுவையும் நாற்றமும் விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண் சங்கே

என்பது நாச்சியார் திரு மொழியாகும்.

"குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தாம் செய்யும் நீள் விசும் பருளும்
அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்"

என்று அருளி செய்துள்ளார் திருமங்கை யாழ்வார்.

இத்தகைய அருள் நலம் மிக்க ஸ்ரீ நாராயணன் எடுத்ததோ 22 அவதாரங்கள்!

1.பிரமன் 2.வராகம் 3.நாரதர் 4. நர நாராயணர்கள் 5.கபில முனிவர் 6.தத்தாத்ரேயர் 7.யக்ஞர் 8.ரிஷபர் 9.பிருகு சக்ரவர்த்தி 10.மச்சர்வதாரம் 11.கூர்மம் 12.தன் வந்திரி 13.மோகினி 14.நரசிம்மர் 15.வாமனர் 16.பரசுராமர் 17.வேதவியாசர் 18.இராமர் 19.பலராமர் 20.ஸ்ரீ கிருஷ்ணர் 21.புத்தர் 22.கல்கி

இவற்றுள் 2,10,11,14,15,16,18,19,20,22 இவை பத்தும் தசாவதாரங்கள் என்றும் பெரிதும் சிறப்பிக்கப் பெறுகின்றன.

வைகுந்ததில் பாம்பணையில் பள்ளி கொண்டு, அறிதுயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவன் திருப்பதியில் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கின்றான்

கூடாரை வெல்லும் சீர் கோவிந்த என்ற ஸ்ரீ ஆண்டாளின் 27 வது பாசுரத்தின் முதல் அடி தான் இது. கூடார் என்பதற்கு பகைவர்கள் என்று மட்டும் பொருள் கொள்ளாமல், திருமாலை இதுவரை வந்து அடைந்து கூடாத மெய் அன்பர்களையும் ஒரு சேர வெல்கின்ற கோவிந்தன் என்பதை உணர்த்துவதாகவே உள்ளது.

திருப்பதிக்கு சென்றால் திருப்பம் ஏற்படும் என்பார்கள். அந்த திருப்பம் திரு வேங்கடவனின் திருவருளால் நல்ல திருப்பமாகவே நாளும் நடைபெறும்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# பாரிஜாத கண்ணன்

நமது சத்வித்யா வாசகர்களுக்கு இந்த இதழில் நாம் அறிமுகம் செய்யப்போகும் சித்தர் பெருமான் பாரிஜாத கண்ணன் என்னும் சித்தராவார்.

இன்றைய தலை முறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் பலர் அவருடைய சக்தியை அறிந்தவர்கள். அவரால் தீவினைகள் நீங்கப் பெற்று நல்வாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

கண்முன்னே பல அற்புதங்களை நிகழ்த்திய பாரிஜாத கண்ணன் என்னும் இந்த மகான், நமது மைய அரசின் ரயில்வே துறையில் பணியாற்றியவர். அப்போது இவர் புரிந்த அற்புத செயல்களால் வெற்றிலை சித்தர் என புகழ்பெற்றவர்.



கொடிய நாகத்தின் விஷத்தினைக் கூட தன் அரிய ஆற்றலால் ஒரு நொடியில் தீர்த்து வைத்த உன்னத சக்தி பெற்றவர். பெயருக்கேற்றாற் போலவே பகவான் கண்ணனுடைய தீவிர பக்தர் இன்னும் சொல்லப் போனால் அந்த கண்ண பரமாத்மாவின் அவதாரமாகவே போற்றி வணங்கப்படுகிறவர் இவரோட ஜீவசமாதி அமைந்திருக்கும் இடம், சென்னையிலிருந்து பாண்டிச்சேரிக்கு செல்லும் கிழக்கு கடற்கரை சாலையில் மரக்கணத்தையடுத்து 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆட்சிக்காடு என்னும் இடத்தில் பிரதான சாலையை ஒட்டி அமைந்துள்ளது, இவரது ஜீவசமாதி ஆலயம் இறைவனின் ஆலயத்திற்கொப்பாக, மூன்று நிலைகளைக் கொண்ட கோபுரம் கோபுரத்தில் 18 சித்தர்களின் சுதைச் சிற்பங்கள் என உயர்ந்து விளங்க, இந்த கோபுர வாயில் வழியாக உட்சென்றால் "பகவான் பாரிஜாத கண்ணனின் ஆலயம் பரந்து காணப்படுகிறது.

"ஸ்ரீ கோகுலம்" என பெயரிடப்பட்ட இவ்வாலயத்தின் கருவறை விமானம் வடநாட்டு கட்டட அமைப்பில் உயர்ந்து விளங்குகிறது! இவ்விமானத்தில் கிருஷ்ண பரமாத்மாவின் விஸ்வரூப தரிசன காட்சி கண்களுக்கு விருந்தாகிறது் இதற்கு ஓர் காரணமும் உண்டு

ஸ்ரீ கிருஷ்ணர் அவதரித்த அதே ரோகிணி நட்சத்திரத்தில் தோன்றியவர் தான் பாரிஜாத கண்ணன். அந்த கண்ணனை நம்பியவர்களை அவர் கைவிடாமல் காத்ததைப் போல, நமது பாரிஜாத கண்ணனை நம்பி வரும் பக்தர்களையும் இவர் கைவிட்டதில்லை.

அதனால் தான் இதனை ஜீவசமாதி என்று குறிப்பிடாமல் பகவான் பாரிஜாத கண்ணன் ஆலயம் என்று

குறிப்பிட்டு, இவரை மகானாக எண்ணாமல் பகவானாகவே போற்றி வணங்குகின்றனர்.
பாண்டிச்சேரியில் வாழ்ந்த பாரிஜாத கண்ணன், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து ரயில்வே துறையில் பணியாற்றியவர். அன்றைய சூழ்நிலையில் நாட்டில் யாரை பாம்பு கடித்தாலும் இவருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வார்களாம், கடிபட்டவரின் பெயர், பிறந்த தேதியைக் கேட்டு, அவர்களுக்காக, தியானம் செய்வாராம் நமது மகான் இவர் தியானம் செய்யத் தொடங்கிய அடுத்த நொடியே பாம்பின் விஷம் இறங்கத் தொடங்கி விடுமாம்!
இதனாலேயே, பகவான் பாரிஜாத கண்ணனுக்கு அன்றைய ரயில்வே துறையில் "விஷராஜா" என்னும் பட்டப் பெயரை சூட்டி கௌரவித்தார்கள்.
தன்னிடம் பிரச்சனை என்று வருபவர்களுக்கு நல்ல நம்பிக்கையை கொடுப்பதோடு, அவர்களது பிரச்சனை தீர தியானம் செய்து, இறையருளை அவர்களுக்கு பரிபூரணமாக கிடைக்கச் செய்து நன்மைகள் அடைய வழி செய்ததனால், இவரை கிருஷ்ண பரமாத்மாவின் மறு அவதாரமாகவே பாவித்து, பக்தர்கள் கொண்டாடி மகிழ்கின்றனர்.
இறையருள் பரிபூரணமாய் பொங்கிப் பெருகி காணப்படும் இந்த ஆலயத்தில் இன்னும் நிறைய சிறப்புக்கள் உள்ளன.

ஆண்டிற்கு இரண்டு முறை, அதாவது ..... ஆடி அமாவாசை, தை அமாவாசை ஆகிய இரு நாட்களில் பகவான் பாரிஜாத கண்ணனுக்கு தைலாபிஷேகம் நடத்தப்படுகிறது. தைலாபிஷேகம் என்பது........ இங்கு வரும் பக்தர்கள் அன்றைய தினத்தில் எண்ணெய் வாங்கி வந்து கொடுக்கின்றனர். பல லிட்டர் எண்ணெய் இப்படி சேர, அந்த எண்ணெயால் பகவான் பாரிஜாத கண்ணனின் சிலைக்கு அபிஷேகம் நடத்தப்படுகிறது! இதுவே தைலாபிஷேகம் எனப்படுகிறது!
இப்படி அபிஷேகம் செய்த எண்ணெயை நோயுற்றவர்களுக்கு பிரசாதமாக கொடுத்து அனுப்புகிறார்கள். இந்த அபிஷேக எண்ணெயின் மகத்துவம் ஒன்றா, இரண்டா?.... உடற்பிணிகள் அனைத்தையும் தீர்த்து வைக்கின்ற அற்புத ஆற்றல் இந்த எண்ணெயில் உள்ளது இந்த எண்ணெயை பயன்படுத்தி, புற்றுநோய் குணமானவர்கள் ஏராளம்! இன்றும் புற்றுநோய் தீர வேண்டி, இங்குள்ளோர் மட்டுமின்றி வெளிநாடுகளில் வாழும் பலரும் இந்த அபிஷேக எண்ணெய் வேண்டி வந்த வண்ணம் உள்ளனர். இது இந்த பகவானின் பெருங்கருணை என்றே சொல்லலாம்.

ஒரு பெண்மணி, தன்னுடைய குழந்தைக்கு ஏதோ பிரச்சனை என்று மூளையில் அறுவை சிகிச்சை செய்திருக்கிறார், அதன் விளைவாக, அந்தக் குழந்தைக்கு நடக்க இயலாமல் போய்விட்டிருக்கிறது. மருத்துவர்கள், இனி இந்தக் குழந்தை நடப்பதற்கு வாய்ப்பே இல்லை என கூறிய நிலையிலும் இவர் தொடர்ந்து மருத்துவம் செய்திருக்கிறார்.
பல வருடங்கள் முயற்சித்தும் பலனின்றி நடக்காமலே இருந்த அந்த சிறுவனை பகவான் பாரிஜாத கண்ணன் ஆலயத்திற்கு அழைத்து வந்திருக்கிறார்.
இங்கு கொடுக்கப்பட்ட மருந்தால் எழுந்து நிற்கவும் மெல்ல நடக்கவும் முடிகிறது விரைவில் மற்றவர்களைப் போல் அவன் நடந்து விடுவான் என்னும் நம்பிக்கை அந்த தாய்க்கு வந்திருக்கிறது!
இது தான் பகவானின் அருள் என அனைவரும் உணர்கின்றனர்.
பகவான் பாரிஜாத கண்ணன், தான் ஜீவசமாதி அடைய வேண்டிய இடத்தை தானே தேடி, இந்த

இடத்தை தேர்ந்தெடுத்தாராம்.

அதற்கு அவர் சொன்ன காரணம், ராமாயண காலத்தில் இந்த இடத்தில் பல ரிஷிகள் யாகம் செய்ததாகவும் அப்படிப்பட்ட புனித இடத்தில் தான் தனது ஜீவசமாதி அமைய வேண்டும் என விரும்பி, இந்த இடத்தில் ஐக்கியமானதாக அவருடன் இருந்தவர்கள் தகவல் சொன்னார்கள்.



தான் எப்போது ஜீவசமாதி அடைந்தாலும் தொடர்ந்து 330 ஆண்டுகள் இந்த பூமியில் வாழ்வேன் என்று பகவான் பாரிஜாத கண்ணன் சொன்னாராம்.

அதற்கேற்றவாறு, இன்றும் உயிர்ப்புடன் இருந்து அருட்கருணையை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார். இங்கு வரும் பக்தர்களுக்கு, வெற்றிலையில் வெண்ணை வைத்து பிரசாதமாக வழங்குகிறார்கள். இந்த வெற்றிலை பிரசாதமே பல நோய்களைத் தீர்த்து நன்மைகளை நல்குகிறத்து

பாமர மனிதனாய் பிறந்து, தனது அருட்சக்தியால் பகவானாய் கோயில் கொண்டிலங்கும் கிருஷ்ண பரமாத்மாவின் மறு அவதாரமான பகவான் பாரிஜாத கண்ணன் ஆலயம் சென்று வணங்குவதால் நோய்கள் தீரும் வினைகள் அகலும் நல்வாழ்வு மலரும்! ஆட்சிக் காடு என்னும் திருத் தலத்தில் அருளாட்சி செய்யும் பகவான் பாரிஜாத கண்ணனை வணங்கி, நன்மைகள் பெறுவோம்.

~ ரா. பன்னீர்செல்வம்




# கடலூர் மாவட்டம்
## திருவருள் புரியும் திருவஹீந்திரபுரம்
## ஸ்ரீ தேவநாதசுவாமி திருக்கோயில்

108 திருப்பதிகளில் ஒன்றான திருவஹீந்திரபுரம் அருள்மிகு தேவநாத சுவாமி திருக்கோயில் கடலூர் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அடிக்கடி, கடலூரிலிருந்து பேருந்து வசதிகள் உண்டு மிகவும் சக்தி வாய்ந்த கோயிலாக உள்ளது. மிகவும் பிரசித்தி பெற்ற வைணவத் தலமாக உள்ளது.நடுநாட்டு வைணவக் கோயில்களில் மிகத் தொன்மையான திருக்கோயிலாகும். சிவன் - பிரம்மா - இந்திரன் - மார்க்கண்டேயர் - பிரகலாதன் போன்றோருக்கு



தரிசனம் தந்தமையை புராணங்கள் கூறுகின்றன. திரு மங்கை ஆழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பட்ட திருத்தலமாகும்.

ஸ்ரீ நிகமாந்த தேசிகன் தம் வாழ்நாளில் பெரும்பாலும் இத்தலத்தில் வசித்ததாக கூறுவர். இத்திருத்தலத்தில் ஔஷதகிரி என்ற புனிதமான மலை உள்ளது. ஸ்ரீ ராம பிரானுக்காகவும், ஸ்ரீ இலக்குவனுக்காகவும் சஞ்சீவி மலையையே ஸ்ரீ ஆஞ்சநேயர் தூக்கி வருங்காலத்தில் - அதன் ஒரு சிறு பகுதிகள் இப்பகுதியில் விழுந்ததாலேயே ஔஷதகிரி என்றானது. பெரிய திருவடி எனப் போற்றப்பெறும் கருட பகவானால் தோற்றுவிக்கப்பெற்ற கருட தீர்த்தமும் இங்கு உள்ளது.

இம்மலை மீது கல்விக் கடவுளாக அருட்காட்சி தரும் ஸ்ரீ லக்ஷ்மி ஹயவ தனப் பெருமாள் அருள் தரிசனம் தருகின்றார். குழந்தைகள் சரளமாக பேசவும், நன்றாக படிக்கவும் இப்பெருமாளை வழிபட்டாலே போதும். யாவும் சித்திக்கும்.

தாயார் செங்கமலத் தாயார் சந்நிதி மிகுந்த தெய்வநலம் மிக்கது. இத்தலத் தாயாரை மனமுருக வழிபட்டால் பதினாறு வகைச் செல்வங்களை பெறலாம்.

திருவகீந்திரப்புர ஸ்ரீ தேவநாதன் சுவாமி மூலஸ்தானத்தில் அவ்வளவு அழகோடு காட்சி அளிப்பார். சிவனும் பெருமாளும் வேறு வேறு அல்ல என்பதை உணர்த்த ஸ்ரீ சங்கர நாராயணராக,

மும்மூர்த்திகளும் ஒன்றே என ஸ்ரீ தாணுமலயன் சுவாமியாக அருட்காட்சி அளிப்பது நாம் அறிந்தவையே.

இத்தலத்திலும் ஓர் அதிசயம்! ஒரு சிலருக்கே இது அறிந்திருக்க கூடியதாகும்.

அதாவது ஸ்ரீ தேவநாத சுவாமியின் நெற்றியில் ஒரு கண் அமைந்துள்ளது. அது வெளியே தெரியாத வண்ணம் திருநாமம் தரிக்கப்பட்டு இருக்கும். இதன் அர்த்தம் சிவன் வேறு விஷ்ணு வேறு அல்ல என்பதை உணர்த்தவே பெருமாள் இந்த சத்தியத்தை மக்களுக்கு உணர்த்துகின்றார்.

அற்புத கலை வேலைப்பாடுகள் கொண்ட புராதனமான கோயில்!

இங்கு ஆயிரக்கணக்கான திருமணங்கள் நடந்தேறி உள்ளன. திருவகீந்திர புரத்தில் மணம் செய்து கொண்டால் இல்லறம் மிகுந்த மகிழ்ச்சியாக நீண்ட காலம் வாழ்வர் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். பன்னெடுங்காலம் தொட்டு மணி விழா கொண்டாடுவோர் இங்கு தான் வந்து வழிபட்டு மகிழ்ச்சியோடு அறுபதை அக மகிழ்வுடன் நிறைவு செய்வர். அப்படி செய்பவர்கள் நீண்ட காலம் தம்பதி சமேதமாக வாழ்வார்கள் என்பதும் நம்பிக்கையாக இருந்து வருகிறது.

எல்லா மாதங்களும் ஏதொரு ஒரு வகையில் விசேஷங்கள் இருந்தாலும், மார்கழி, புரட்டாசி, ஆடி - போன்ற மாதங்களில் மிகவும் விசேஷமாக உற்சவங்கள் நடைபெறும்.

வைகுண்ட ஏகாதசியன்று ஸ்ரீ கருட வாகனத்தில் ஸ்ரீ தேவநாத சுவாமி எழுந்தருளும் சொர்க்க வாசல் திருப்பும், தைமாத பொங்கலை ஒட்டி, மாட்டுப் பொங்கல் நாளில் மஞ்சு விரட்டும், புரட்டாசி சனிக் கிழமைகளில் சிறப்பு வழிபாடுகளும், ஆடிப் பூர நாளில் அற்புத அலங்காரங்களும், தூப தீப ஆராதனைகளும் காண கண் கோடி வேண்டும். அனைத்து நாட்களிலும் நித்ய கல்யாண புருஷராக திகழும் ஸ்ரீ தேவநாத சுவாமியையும் ஸ்ரீ ஹேமடம்புஜ வல்லி, ஸ்ரீ செங்கமலத் தாயாரையும் உள்ளமுருக சேவித்து பெரும் சௌபாக்கியங்களை பெறுவோம்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# மேஷம் ஜூன் 1 – 15 ராசி பலன் 2021

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்



## மேஷம்

- திருமணமான தம்பதிகள் இடையே சுமுகமான உறவு இருக்கும்.
- திருமணமான தம்பதிகளின் தாம்பத்திய வாழ்வு சிறக்கும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். அன்னியோன்யம் பெருகும்.
- உத்தியோகத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்பு அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவு எடுங்கள்.
- சுயதொழில் செய்பவர்களுக்கு தொழிலில் ஏற்றம் மிகுந்து காணப்படும்.
- கூட்டுத்தொழில் செய்பவர்களின் வருமானம் அதிகரிக்கும்.
- இந்த மாதம் பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டாகும்.
- இந்த மாதம் உங்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.
- மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆட்படுவார்கள். படிப்பில் கவனம் தேவை.
- உங்கள் ஆரோக்கியத்தில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல் நல பாதிப்பு ஏற்படலாம். போதுமான நீர் உட்கொண்டு இந்த பாதிப்பில் இருந்து தப்பிக்கலாம்.



# ரிஷபம்

- திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள்.  இருவருக்கும் இடையே இணக்கம் அதிகரிக்கும்.
- உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் நல்ல சுமுகமான உறவு நிலை இருக்கும். இது தங்களின் மன மகிழ்ச்சியை கூட்டும்.
- சுயதொழில் மற்றும் உத்தியோகத்தில் நீங்கள் சாதகமான விஷயங்களை எதிர்பார்க்கலாம்.
- பணியிடத்தில் நீங்கள் நல்ல பெயர் பெறுவீர்கள். பணியிடச் சூழல் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும்.
- புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். புதிய நண்பர்கள் மூலம் உங்களுக்கு தன உதவி கிடைக்கும். தங்களின் பொருளாதார நிலையும் சிறப்பாக இருக்கும்.
- பங்கு வத்தகத்தில் முதலீடு செய்வதர்க்கும் லாபங்களை ஈட்டுவதற்கும் இந்த மாதம் ஏற்றதாக உள்ளது.
- மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




AMRTA KARUNA SYRUP
Control Infection Caused due to Bacteria or Virus
Call: 88702 88701




# மிதுனம்

- குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் இருந்தாலும் கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும்.
- இந்த மாதம் நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன்  நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும் மாதமாக இருக்கும்
- உத்தியோகத்தில் உள்ளவர்கள்  அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். புதிய பொறுப்புக்கள் உங்களுக்கு வழங்கப்படும். உங்கள் செயல் திறன் பிறரால் பாராட்டப்படும்.
- சுயதொழில் மேற்கொள்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப்  பெறுவீர்கள்.
- வீட்டுத் தேவைக்கான செலவுகள் அதிகரிக்கும்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம்.
- உங்கள் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். அதனை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் உடற் பயிற்சி மற்றும் தியானம் போன்றவற்றை மேற்கொள்ளுங்கள்.



# கடகம்

- திருமண உறவில் உள்ளவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையின் அன்பைப் பெறுவீர்கள். இந்த மாதம் உங்கள் உறவு மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும்.
- அரசு பணியில் இருப்பவர்களுக்கு இந்த மாதம் சிறப்பாக இருக்கும். தன்னுடன் பணிபுரிபவர்களிடம் சுமூகமான உறவு ஏற்படும்.
- உத்தியோகத்தில் இருக்கும் உங்களின் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.
- சுயதொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்க ஏற்ற மாதம் ஆகும்.
- பொருளாதார நிலையைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு சில அனுகூலங்கள் இருக்கும். பொருளாதார நிலையில் ஏற்றம் காணப்படும்.
- பள்ளிக் கல்வி பயிலும் மாணவர்கள் பல புதிய விஷயங்களை கற்றுக் கொள்வார்கள்.
- தங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



# சிம்மம்

- திருமணமான தம்பதிகள் தங்களின் மனதை சந்தோசமாக வைத்திருக்க குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்ல விரும்புவீர்கள். ஆனால் வேலை பளு காரணமாக வெளியில் செல்ல முடியாத நிலை ஏற்படலாம்.
- குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் இருக்கும்.
- உத்தியோகத்தில் சாதனைகளைப் புரிவதற்கு வாய்ப்பு உள்ளது.
- சுயதொழில் செய்பவர்கள் தங்கள் இலக்குகளை அடைய அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது இருக்கும்.
- நிதிநிலையைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும். நிதி நிலையில் ஏற்றம் மிகுந்து காணப்படும்.
- கல்வி பயிலும் மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் முன்னேறுவார்கள்.
- உங்கள் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. தினமும் உடற்பயிற்சி செய்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நல்ல நிலையில் பாதுகாத்துக் கொள்ள இயலும்.



# கன்னி

- குடும்பத்தில் அமைதி நிலவ சண்டை மற்றும் வாக்கு வாதத்தை தவிர்க்க வேண்டும்.
- விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் கணவன் மனைவி உறவில் நெருக்கம் அதிகரிக்கும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.
- வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் உங்களை நாடி வரும். அதன் மூலம் நீங்கள் ஆதாயமும் வெற்றியும் பெறுவீர்கள்.
- உங்கள் பொருளாதார நிலை ஏற்றம் காணும் வகையில் இருக்கும். உங்கள் அன்றாட பொருளாதார தேவைகளை நீங்கள் எளிதாக சமாளிப்பீர்கள். பணத்தை எதிர்கால நலன் கருதி சேமிப்பீர்கள்.
- மாணவர்களுக்கு இந்த மாதம் சிறந்த மாதமாக இருக்கும். படிப்பில் நாட்டம் அதிகரிக்கும்.
- உடல் ஆரோக்கியத்தை பொறுத்த வரை தலை வலி மற்றும் வயிற்றில் செரிமான பிரச்சனைகள் வரலாம். உண்ணும் உணவில் கவனம் தேவை.



# துலாம்

- திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு தக்க துணை கிடைக்க உகந்த காலம் ஆகும்.
- திருமணமான தம்பதிகள் இடையே ஒற்றுமை நீடிக்கும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. வீண் வக்குவாத்தை தவிர்பது நன்மை பயக்கும்.
- கூட்டுத் தொழில் உங்களுக்கு லாபத்தை அளிக்கும்.
- வீடு பராமரிப்பு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குதல் போன்ற விஷயங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.
- கடன் மற்றும் பணம் சம்பந்தமான பிரச்சனைகள் ஏதேனும் இருந்தால் அவை இந்த மாதம் உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.
- மாணவர்களுக்கு இந்த மாதம் படிப்பில் நாட்டம் அதிகரிக்கும்.
- உங்கள் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. சுவாசம் மற்றும் நுரையீரல் சம்மந்தப் பட்ட பிரச்சனைகள் வரலாம். தினமும்  மூச்சுபயிற்சி செய்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நன்றாக வைத்துக்கொள்ள இயலும்.



# விருச்சிகம்

- இந்த மாதம் காதல் உறவில் உள்ளவர்களுக்கு உறவில் கவனம் தேவை.
- திருமண முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.
- தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.
- கூட்டுத் தொழில் உங்களுக்கு நல்ல லாபத்தை கொடுக்கும்.
- உத்தியோகத்தில் இருப்பவர்கள் அங்கீகாரம் பெற சிறிது கடினமாக உழைக்க வேண்டியிருக்கும்.
- உங்கள் கடந்த கால முதலீடுகளின் மூலம் நீங்கள் லாபம் பெறுவீர்கள். உங்கள் பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கும்.
- வீடு பராமரிப்பு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குதல் போன்ற விஷயங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.
- மாணவர்கள் படிப்பில் விடா முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் வெற்றி பெற முடியும்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பெரிய அளவிலான பாதிப்புகள் ஏதும் இருக்காது என்றாலும் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.



# தனுசு

- திருமண உறவில் உள்ளவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. வாக்குவாத்தை தவிர்பது நன்மை பயக்கும்.
- தாய் தந்தை போன்ற வயதானவர்களின் உடல் நிலையில் சிறிது கவனம் தேவை.
- உத்தியோகத்தில் இருக்கும் அன்பர்கள் அங்கீகாரம் பெற சிறிது கடினமாக உழைக்க வேண்டியிருக்கும்.
- எழுத்துத் துறை மற்றும் தகவல் தொடர்பு துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள்.
- இந்த மாதம் நீங்கள் கடினமான முயற்சிகள் எடுப்பதன் மூலம் உங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள இயலும்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முதுகு சம்மந்தபட்ட பிரச்சனைகள் வரலாம். யோகா மற்றும் தியானம் செய்வதன் மூலம் நல்ல உடல் ஆரோக்கியம் பெறலாம்.
- பள்ளி கல்வி படிக்கும் மாணவர்களின் கிரகிக்கும் திறன் அதிகரிக்கும். படிப்பில் வெற்றி கிடைக்கும்.




உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்

www.priestservices.com

போன்: 88702 88701



# மகரம்

- நீங்கள் அனுசரித்துச் செல்வதன் மூலம் குடும்ப உறவுகள் சீராகவும் நல்லிணக்கத்துடனும் இருக்கும்.
- குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் இருந்தாலும் கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும்.
- உத்யோகத்தைப் பொறுத்தவரை முன்னேற்றத்தில் மந்த நிலை இருக்கும். இது உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும். கடினமாக உழைத்தாலும் அதற்குரிய பலன் கிடைப்பது அரிதாக இருக்கும்.
- சுயதொழில் செய்பவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெறுவார்கள். வியாபாரத்தில் வெற்றி கிடைக்கும்.
- வியாபாரம் செய்பவர்கள் தங்கள் விற்பனை அதிகரிக்கக் காண்பார்கள்.
- வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் கணிசமான லாபத்தை ஈட்டுவார்கள்.
- இந்த மாத ஆரம்பத்தில் தங்களின் பொருளாதார நிலை சுமாராக இருக்கும்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதனை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் உடற் பயிற்சி மற்றும் தியானம் போன்றவற்றை மேற்கொள்ளுங்கள்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம்.



# கும்பம்

- திருமணமானவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையின் அன்பையும் அக்கறையையும் பெறுவீர்கள். இந்த மாதம் உங்கள் உறவு மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும்.
- வேலை தேடிகொண்டிருப்பவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.
- கூட்டுத் தொழிலில் அதிக லாபங்களை கொடுக்கும் மிகவும் உன்னதமான மாதமாக இந்த மாதம் அமைகிறது.
- சுயதொழில் மற்றும் வியாபாரம் ஸ்திரமான நிலையில் இருக்கும். நல்ல லாபங்களை எதிர்பார்க்கலாம்.
- இந்த மாதம் உங்கள் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். வருமானம் உயரக் காண்பீர்கள்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதனை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் உடற் பயிற்சி மற்றும் நல்ல உணவு பழக்கம் போன்றவற்றை மேற்கொள்ளுவது நன்மை பயக்கும்.
- மாணவர்கள் மனதில் பதட்ட நிலை இருக்கும். மாணவர்கள் அதிக முயற்சியுடனும் கவனமுடனும் படிக்க வேண்டும்.



# மீனம்

- குடும்பத்தில் அன்பும் மகிழ்ச்சியும் இருக்கும். குடும்பத்தார் அனைவரிடமும் சுமுகமான உறவு காணப்படும்.
- திருமண பந்தத்தில் உள்ளவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.
- உத்தியோகத்தில் இருக்கும் அன்பர்கள் திறம்பட செயலாற்றுவார்கள்.
- சுயதொழில் செயவர்கள் தொழிலில் போட்டிகளை சந்திப்பீர்கள். புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை.
- நீங்கள் வாங்கிய பழைய கடன்களை திருப்பிச் செலுத்த இது ஏற்ற காலம் ஆகும்.
- இந்த மாதம் புதிய முதலீடுகள் எதுவும் மேற்கொள்ளாதீர்கள்.
- மாணவர்களின் கிரகிக்கும் திறன் மற்றும் படிப்பில் கவனச்சிதறல்கள் ஏற்படலாம். மாணவர்கள் தியானம் செய்வதன் மூலம் கிரகிக்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அனைத்து ஜோதிட, புரோஹித மற்றும் ஆன்மிக சேவைகளுக்கு
தொடர்புகொள்ள: **88702 88701**